# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண். 195/2025

## அ.சா. 2 (LW 5)

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **திரு.மலைச்சாமி** | **தொழில்** | |
| **த/க பெயர்** | ஜெயசீலன் | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலூகா** | | **தேதி** | .2026 |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

எதிரி ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது திண்டுக்கல் நத்தம் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு நான் திண்டுக்கல் நகர் மேற்கு காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியிலிருந்த போது காலை 11.00 மணிக்கு என்னுடன் பணியாற்றிய சிறப்பு சார்பு ஆய்வாளர் லாரன்ஸ், மற்றும் முதல்நிலை காவலர் 872 பிரகாஷ் ஆகியோருடன் எங்களது சரக பகுதியில் குற்ற தடுப்பு நடவடிக்கையாக ரோந்து சென்ற போது திண்டுக்கல் ஆர்.எம்.காலனி மயான ரோட்டில் நீளமான பார்த்தால் பயப்படக்கூடிய கொடூரமான மரக்கைப்பிடியுடன் கூடிய வாளுடன் நின்றிருந்த நபர் எங்கள் போலிஸ் பார்ட்டியை பார்த்தவுடன் ஓட முயன்றவரை நாங்கள் சுற்றி வளைத்து விசாரிக்க எங்களைப் பார்த்து என்ன பிடிச்சிங்கன்னா இந்த வாளால் உங்களை வெங்களை கொன்று விடுவேன் தேவடியா ,தாயோளி மகனே என கூறியவரை விசாரிக்க அவர் பெயர் கார்த்தி என்ற பொக்கை கார்த்தி , வயது 25. த/பெ. கோபி, 160, மருதாணி குளம், திண்டுக்கல் என்று பெயர், விலாசம் சொன்னவரிடம் எதற்காக கையில் வாளுடன் திரிகிறாய் என கேட்டதற்கு என்னுடைய வழக்கிற்கு வக்கீல் அவர்களுக்கு பீஸ் கட்டனும் , அதற்கு என்னிடம் பணம் இல்லை , அதனால் அவ்வழியாக போவோர், வருவோரிடம் கத்தியை காட்டி பணம் பறிக்கலாம் என்று நின்றிருந்த என்னை நீங்கள் சுற்றிவளைத்து பிடித்து கொண்டீர்கள் என்று சொன்னவரிடம் காரணம் கூறி 11.15 மணிக்கு அவரை கைது செய்தும், பின்பு எதிரி வைத்திருந்த மரக்கைப்பிடியுடன் கூடிய வாளை பொதுமக்கள் சாட்சிகள் யாரும் முன்வராத காரணத்தால் என்னுடன் ரோந்துக்கு வந்த காவலர்கள் முன்னிலையில் 11.30 மணிக்கு அத்தாட்சியில் கைப்பற்றினேன். பின்பு கைப்பற்றிய வழக்கு சொத்துடன் எதிரியையும் சேர்ந்து 12.30 மணிக்கு காவல்நிலையம் கொண்டு வந்து பாராவசம் ஒப்புவித்து நிலைய குற்ற எண். 10/2025 இதச பிரிவுகள 296(1),221, 351(3) BNSS& 25(1) (a) Arms Act ஆக வழக்கு பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல்தகவல் அறிக்கை இதுதான். அது அ.த.சா.ஆ.2. ஆகும். பின்பு முதல்தகவல் அறிக்கையை

கனம் நீதித்துறை நடுவர் எண்.1 அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். திண்டுக்கல் நகர் மேற்கு காவல் ஆய்வாளர் வெளி அலுவலாக சென்றதினால் உயர் அதிகாரிகளின் உத்தரவை பெற்று இவ்வழக்கை எனது விசாரணைக்கு எடுத்துக் கொண்டு மேற்படி சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், எதிரியின் கைது விவரத்தினை அவரது உறவினருக்கு தகவல் சொல்லியும் பின்பு வழக்கு சொத்தினை படிவம்-91 ல் பதிவு செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். நான் தயார் செய்த படிவம் -91 இதுதான். அது **அ.த.சா.ஆ.3.**ஆகும். பின்பு எதிரியை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தி நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்பு எனது விசாரணையை முடித்து காவல் ஆய்வாளர்அவர்கள் பார்வைக்கு வைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

வழக்கின் சம்பவ இடமானது பொதுமக்கள் மிகுந்த பகுதி என்றால் மக்கள் நடமாட்டம் குறைவு. எதிரியிடம் நான் வாக்கு மூலமோ, ஒப்புதல் வாக்குமூலமோ எதுவும் வாங்கவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு நான் அத்தாட்சி படிவம் கொண்டு வந்தததாக ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அத்தாட்சி படிவம் காவல் நிலையத்தில் வைத்து தட்டச்சு செய்யப்பட்டதா என்றால் சம்பவ இடத்தில் வைத்துதான் தட்டச்சு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அத்தாட்சியை யார் டைப் செய்தார்கள் என ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் நான்தான் டைப் செய்தேன். ஆனால் விசாணையில் சொல்லவில்லை. அத்தாட்சியில் கைப்பற்றப்பட்ட வாள் பொதுவாக இரும்பு பட்டறையில் செய்யக் கூடியதுதான். சம்பவ இடத்தில் இருந்த தனி நபர் சாட்சிகளை நான் இந்த வழக்கில் புகார் அளிக்க வருமாறு அழைத்ததாக ஆய்வாளர் விசாரணையிலும் முதல் தகவல் அறிக்கையிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அத்தாட்சியில் கைப்பற்றப்பட்ட சான்று பொருள் சம்பவ இடத்தில் வைத்து சான்றுப் பொருள் பெட்டியில் வைத்து என்னால் சீலிடப்படவில்லை என்றால் சரிதான். ஆய்வாளர் என்னை விசாரித்ததை எழுதினாரா அல்லது டைப் செய்தாரா என ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ தேதியில் ஆய்வாளர் வினோதா உயர் அதிகாரி என்றால் சரிதான். காவலர்கள் பிரகாஷ், லாரன்ஸ் என்னுடன் பணிபுரிந்த போலிசார் ஆவார்கள். சம்பவ தேதியில், சம்பவ இடத்தில் எதிரி இல்லை என்றாலும், எதிரி கெட்ட வார்த்தையால் பேசவும் இல்லை என்றாலும் , கொலை மிரட்டல் விடுக்கவில்லை என்றாலும், அத்தாட்சி மற்றும் சான்றுப் பொருள் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் ஆய்வாளர் அறிவுறுத்தலின் பேரில் பொய்யான முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை - இல்லை.</u>

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this

contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.03.06 21:47:43 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.